(Regi)stered as a News Paper பக்கங்கள் 06 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

(TH)E EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

(நா)தம் 08 திருவள்ளுவர் ஆண்டு 2024 தை 19 (01-02-1993) திங்கட்கிழமை ஓசை 349

## மாவீரர் நாள் நிகழ்வுகள் கருத்து கூற கோரிக்கை

சென்ற வருடம் நடைபெற்று முடிந்த மாவீரர் வார நிகழ்வுகள் பற்றி, மாவீரர்களை, அவர்களது பெற்றோரை மதித்துப் போற்றுவதற்கான நிகழ்ச்சிகள் பற்றி, அதற்காகக் கடைப்பிடிக்கப்பட்ட, ஒழுங்கு முறைகள்பற்றி தமக்குத் தோன்றிய, தோன்றுகின்ற எண்ணங்களை, கருத்துக்களை தமிழீழ மாவீரர் பணிமனைக்கு நேரிலோ, எழுத்துமூலமோ தெரிவிக்கும்படி தமிழீழ மாவீரர் பணி (5 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் ஆயர் ஜனாதிபதியை சந்திப்பார்

# (த)மிழர்பிரச்சினைக்குஉடனடித்தீர்வு

# (யா)ழ். முற்றுகையை தளர்த்துக!

## 10 லட்சம் மக்களை சிறை வைப்பது மனித விரோத செயல் என்கிறார் ஆயர்



(யாழ்ப்பாணம்)

தமிழரின் இனப்பிரச்சினைக்கு உடனடியாக ஓர் அரசியற் தீர்வு காணப்படவேண்டும், யாழ். குடா நாட்டின்மீதான இராணுவ முற்றுகையைக் கைவிடவேண்டும் என தான் எதிர்வரும் 11ஆம் திகதி ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவை சந்திக்கும் பொழுது வற்புறுத்தப்போவதாக மன்னார் மறை மாவட்ட ஆயர் பேரருட் திரு. இராயப்பு யோசப்அவர்கள் தெரிவித்தார். மேலும் அவர்யாழ். குடாநாட்டிற்குள் பத்து இலட்சம் மக்களை சிறை வைத்திருப்பதுபோன்று அடைத்து,வைத்திருப்பது ஒரு மனித விரோதச் செயல் எனவும் குறிப்பிட்டார்.

பாவசயூர் திருக்குடும்ப கன்னியர் மடத்தில் நேற்று மாலை எமது செய்தியாளருக்கு வழங்கிய விசேட பேட்டியின்போதே அவர் இவ்வாறு கூறினார். மேலும் அவர்,

கிளாலி கடல்நீரேரிப் பாதையைப் பொது மக்களின் போக்குவரத்துக்கு அரசு தடைவிதித்திருக்கும் செயல் மனித உரிமை மீறலின் உச்ச நிலையாகும். இது யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள பத்து லட்சம் மக்களை அவர்களது சொந்த மண்ணில் ஒட்டு மொத்தமாகச் சிறை வைத்திருப்பதற்குச் சமமான மனித நேயமற்ற செயலாகும் எனத் தெரிவித்தார்.

இப்போது நடைபெறும் போராட்டம் ஒரு மனித உரிமைப் போராட்டம் என்று வர்ணித்த அவர், இது குறிப்பாக தமிழ் மக்களின் உரிமைகளுக்கான போராட்டம். இனப்பிரச்சினையை அரசியல் வாதிகள் முன்பு தமது சுயலாபம் கருதிப் பாவித்தார்கள் இன்றும் கூட இலங்கையின் (5 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் பாரிய இராணுவ நடவடிக்கை

### பம்பை மடுவில் படைகள் தரிப்பு

(வவுனியா)

...ண்டுவீச்சு விமானங்கள், ...கு வானூர்திகள் உதவி... பெருந் தொகையான ...ங்கா இராணுவத்தினர் ...பமடு நோக்கி முன் ...வதாக செய்திகள் தெரி...ன்றன. நேற்றுக் காலை 5 மணியளவில் வவுனியா மணிப்புரம் சிறிலங்கா இராணுவ காவலரணிலிருந்து வெளியேறிய பெருமளவு இராணுவத்தினரே பம்பைமடு நோக்கி முன்னேறியதாக தெரிவிக்கப்படுகிறது.

கனரகவாகனங்கள் சகிதம் முன்னேறிய படையினருக்கு உதவியாக குண்டுவீச்சு விமானங்கள் உலங்குவானூர்திகள் ஆகியன உக்கிர தாக்குதலை மேற்கொண்டன. இத்தாக்குதல்களால் ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவில்லை.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## (மூ)தூர் பகுதி சுற்றிவளைப்பு 14 பொதுமக்கள் கைது

[மூதூர்]

(சி)றிலங்கா இராணுவத்தி...ர் மூதூர் பகுதியை சுற்றி...ளைத்து பதின்நான்கு ...துமக்களைக் கைது ...து முகாமிற்குக் கொண்டு ...றுள்ளனர்.

...டந்த 28 ஆம் திகதி காலை 6.30 மணியளவில் மூதூரில் உள்ள மல்லிகைத்தீவு எனும் இடத்தைச் சுற்றிவளைத்த சிறிலங்காப் படையினரே அத்தீவினைச் சேர்ந்த இளைஞர்களைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் சிறிலங்கா இராணுவ முகாமிற்குக் கொண்டுசெல்லப்பட்டனர். இவர்களால் கைது செய்யப்பட்டவர்கள் எவரும் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை.

சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யபபட்ட மல்லிகைத் தீவு மக்களின் விபரங்கள் வருமாறு:-

பாக்கியத்துரை திருக்குமார் [வயது 22]. நாகராசா ரகு [வயது 17] வடிவேல் மதியழகன் [வயது 38], ரவிச்சந்திரன் சசி [வயது 16], வேலாயுதம் நற்குணசிங்கம் [வயது 23], விசுவலிங்கம் விஜயன் [வயது 36], ஆசைக்குட்டி துரைராசா [வயது 38]. தங்கையா விக்னேஸ்வரன் [வயது 26], விநாயகமூர்த்தி அன்புராசா [வயது 29] கதிர்காமத்தம்பி இராசு (5 ஆம் பக்கம் பார்க்க)

## (தி)ருமலை ஊர்காவல்மீது (வி)டுதலைப் புலிகள் தாக்கு

### இருவர் பலி; ஆயுதங்கள் மீட்பு

[திருமலை]

(தி)ருமலைப் பகுதியில் சிறி...கா ஊர்காவல் படையி...மீது விடுதலைப் புலிகள் ...கொண்ட தாக்குதலில் ...டு ஊர்காவல் படையி(னர்) கொல்லப்பட்டதுடன் ...ர்களிடமிருந்து இராணுவ ஆயுதங்களும் கைப்பற்றப் பட்டன.

நேற்றுக் காலை6.55 மணியளவில் திருமலை 'யான் ஓயா பாலத்திற்கு அருகில் வைத்து அப்பகுதியால் வந்த இரு ஊர் காவல்படையினர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## செட்டிகுளம் முகாமை பொறுப்பேற்க மறுப்பு

[மன்னார்]

செட்டிகுளம் பகுதியிலுள்ள அகதிமுகாம்களை பொறுப்பேற்க ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் மறுப்பு தெரிவித்துள்ளதாக அறியவருகிறது.

இராணுவத்தினர் அத்துமீறி அவ் அகதி முகாம்களுக்குள் புகுந்து சில நடவடிக்கைகளை மேற்கொள்வதனாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## மன்னார் தீவில் மக்கள் பெரும் அவதி

(யாழ்ப்பாணம்)

மன்னார் தீவு பகுதியில் சுமார் 20 வீதமான மக்களே மீளக் குடியேறியுள்ளனர். மக்கள் பெரும் கஷ்டத்தின் மத்தியிலே தமது சீவியத்தை நடத்துகின்றனர் என மன்னார் ஆயர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் மன்னார் தீவுக்கு வெளியே உள்ள இராணுவ கட்டுப்பாட்டு பகுதியில் சுமார் 600 குடும்பங்கள் வாழ்வதாகவும், இதனால் இப்பகுதிகளில் மனித சஞ்சா

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வாணிபம்/தொழில் பதிவு சான்றிதழ் வழங்கல்

உடுவில், சங்கானை, தெல்லிப்பழை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் தமது வாணிபம்/தொழில் முயற்சிகளைப் பதிவுசெய்ய விண்ணப்பித்தவர்கள் வாணிபம்/தொழில் பதிவுச் சான்றிதழ்களைப் பின்வரும் நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை யாழ்ப்பாணம், கந்தர்மடத்தில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் வருவாய்ப்பகுதிச் செயலகத்தில் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சான்றிதழ்கள் உரிமையாளர்களிடம் மட்டுமே கையளிக்கப்படுமென்பதைக் கவனத்திற் கொள்ளுமாறு யாழ் மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் யோ தமிழ்க்குமரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவு - 02-02-93
சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவு - 03-02-93
தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவு - 03-02-93

## வரி விளம்பரம்

**200 நாடகங்கள்**

O/L தமிழ்மொழி பாடதிட்டத்தில் வானொலி நாடகமும் உள்ளது. இதைக் கற்பதற்குப் பயன்படக்கூடிய ஒரேயொரு நூல்—200க்கும் அதிகமான நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் மூதலாம்பிள்ளை 30/-

[4053]

## கூட்டம்

யாழ். ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டம் எதிர்வரும் ஐந்தாம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ் வர்த்தக சங்கப் பணிமனையில் இலக்கம் 21, நவீன சந்தை (மேல்மாடி)யில் நடைபெறவுள்ளது. இக்கூட்டதில் தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் துறை உறுப்பினர்களும் கலந்து கொள்வார்கள்.

## பயிற்சி நெறிகள் நாளை ஆரம்பம்

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் புதிய மாணவர்களாக ஆசிரிய பயிற்சிப் பாடநெறியை கற்கஉள்ளோர்க்கான இவ் வருடத்துக்கான வகுப்புக்கள் 02 02 93-ல் ஆரம்பமாகஉள்ளதெனபலாலி ஆசிரிய பயிற்சிக்கலாசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

இப்பயிற்சி நெறிகளைப் பயில தேர்ந்தெடுக்கப்பட்டோர்க்கான நியமனக்கடிதங்கள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேலும் வர்த்தக பாடநெறியை பயில விண்ணப்பம் அனுப்பியவர்களில் சுமார் 37 ஆசிரியர்களின் பெயர்ப்பட்டியலில் வந்து சேர்ந்துள்ளதாகவும் இவர்களுக்கான நேர்முகப்பரீட்சை விரைவில் நடைபெற உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது 14,24

## 41-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிகிரியையும்

01-02-93

மலர்வு: 1958 | 05 | 26



உதிர்வு: 1992 | 12 | 28

### திருமதி மல்லிகாவதி ஆனந்தன்

என தாருயிரே கண்மணியே மல்லிகையே
காற்றைச் சுவாசிக்க மறந்தேன் வதியே
உன்தன் சுவாசம் என்மீது பட்டால்
வெயிலவன் கரங்கள் என்னை ஒன்றும் செய்யா
உமது நிழலில் உன்னதமாய் ஆறினேன்
நீ போன தூரமெங்கே மூவரையும் எனையும்
எப்படி நீர் பிரிந்தீர்!

உம் பிரிவால் வாடும்

ஏழாலை வடக்கு,
ஏழாலை,
—
வவுனியா

கணவன்: V S ஆனந்தன்
பிள்ளைகள்: மயூரன், ஜனகன், ஆதவன்

(4194)

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

### மைதான விரிவாக்கம் - 2-ம் கட்டம்

பரிசு பெற்ற சீட்டு இலக்கங்கள்

(1) 1-ம் பரிசு: இல. 38293 - ரூபா 10.000
(2) 2 ம் பரிசு; இல. 19342 - ரூபா 7 500
(3) 3-ம் பரிசு: இல. 38768 - ரூபா 5,000

**10 ஆறுதல் பரிசுகள் - தலா ரூபா 1000 வீதம்**

| | | | |
|---|---|---|---|
| (1) | 16296 | (6) | 21855 |
| (2) | 10476 | (7) | 21881 |
| (3) | 08612 | (8) | 35230 |
| (4) | 05302 | (9) | 30549 |
| (5) | 17665 | (10) | 30508 |

**பரிசளிப்பு - 06 - 02 - 93 பிற்பகல் 3-00 மணி**

மேற்படி பரிசு பெற்ற பற்றுச்சீட்டுகளை வைத்திருக்கும் அதிர்ஷ்டசாலிகள் 06-02-1993 அன்று கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும் ''முழு நிலாநாள் அறிவியலரங்கு'' தினத்தில் தமது பரிசுச் சீட்டுக்களை சமர்ப்பித்து பரிசுகளை பெற்று செல்லுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: எம்மால் விற்பனை செய்யப்பட்ட சகல அதிர்ஷ்ட லாபச் சீட்டுகளும் சீட்டிழுப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டது என்பதை அறியத் தருகிறோம்.

ப. மா. சங்கம்,
யாழ். இந்துக் கல்லூரி.

பாலசுப்பிரமணியம் தவபாலன்
செயலர்

## மட்டக்களப்பு அகதிமுகாமின் அவலநிலை

# அறுபது வீத சிறுவர்களுக்கு போஷாக்கு உணவில்லை

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு அகதி முகாம்களிலுள்ள சிறுவர்களில் 60 சதவீதமான பிள்ளைகள் போஷாக்கு குறைவானவர்களாகக் காணப்படுகின்றனர் இவ்வாறு மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் அ. கி. பத்மநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

மட்டக்களப்பு மண்முனை வடக்கில் உள்ள 13 அகதி முகாம்களில் பிள்ளைகளின் போஷாக்கு நிலையை அறிவதற்கு 'யுனிசெப்' நிறுவனத்தின் வேண்டுகோளையடுத்து எடுக்கப்பட்ட ஆய்வின் மூலம் இது தெரியவந்துள்ளதாககூறினார்.

அத்துடன் அகதி முகாம்களில் இருந்து பாடசாலை செல்லும் 1231 வசதியற்ற மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்க யுனிசெப் நிறுவனம் முன்வந்துள்ளது.

பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கப்பட்ட கிராமங்களைச் சேர்ந்தவர்கள் அகதி முகாமில் இருந்தால் அவர்களை சொந்த இடங்களுக்கு மீளக்குடியமர்த்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கும்படி இராணுவ அதிகாரி தெரிவித்திருப்பதாகஅவர் மேலும் கூறினார்.

# 3000பேர்உள்ள அகதிமுகாமில் ஒரே ஒரு கழிப்பிடம் மட்டும்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் இருக்கும் சுமார் மூவாயிரம்பேரைக் கொண்ட அகதி முகாம் ஒன்றிற்கு ஒரே ஒரு கழிப்பிடம் மட்டும்தான் இருக்கின்றது. ஆனால் நாடு முழுவதும் மணிக்கூட்டுக்கோபுரங்களைக் கட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்று ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர்களில் ஒருவரான காமினி திஸநாயக்கா கூறியுள்ளார்.

அண்மையில்உடதும்பற பகுதியில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசிய அவர் மேலும் கூறுகையில், டி. எஸ். சேனநாயக்கா காலத்தில் கல்லோயாத் திட்டமும், டட்லி காலத்தில் வளவகங்கைத் திட்டமும் ஜே. ஆர். ஜெயவர்த்தனா காலததில் மகாவலி கங்கைத் திட்டமும் செயற்படுத்தப்பட்டன. ஆனால் பிரேமதாசாகாலத்தில் மணிக்கூட்டுக் கோபுரங்கள் தான் கட்டப்பட்டுவருகின்றன. உலகில் எந்த ஒரு நாடாவது ஆடைத் தொழிற்சாலைகளால் முன்னேற்றமடைந்தது உண்டா என்றும்வினாவினார்.

அத்துடன் கிழக்கு மாகாணத்தில் இருக்கும் அகதி முகாம்களில் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் கூட செய்துகொடுக்கப்படவில்லை. மூவாயிரம் பேர் ஒரே ஒரு கழிப்பிடத்தைப் பயன்படுத்தும் அவல நிலை தொடர்கிறது. ஆனால் பிரேமதாசா நாடு முழுவதும் மணிக்கூட்டுக் கோபுரங்களைக் கட்டி வருகிறார் எனவும் தெரிவித்தார்.

## மாயையாகிப் போய்விட்ட தெரிவுக்குழுவின் முயற்சிகள்

[கொழும்பு]

அரசியல்தீர்வு காணும்முயற்சிகள் அனைத்தும் மாயையாகிப் போய்விட்டது என்று ரெலோ இயக்கப் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில், இனப் பிரச்சினைக்கான தீர்வைக் கண்டறிய நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் மீது எல்லா நம்பிக்கையையும் இழந்து விட்டதாகக் குறிப்பிட்டார்.

அத்துடன் இனப்பிரச்சினைத் தீர்விற்காக ஐக்கிய தேசியக்கட்சி முன் வைக்கும் திட்டத்தை சுதந்திரக்கட்சி எதிர்க்கும் என்ற நிலை இப்போது மாறிவிட்டது. இப்போது இரு கட்சிகளும் கை கோர்த்துக் கொண்டு தமிழர் உரிமை எதையும் வழங்கமறுக்கின்றன எனவும் தெரிவித்தார்.

மேலும் இனப்பிரச்சினைக்கான தீர்வைக்காணும் மங்கள முனசிங்க தலைமையிலான தெரிவுக்குழுவின் நடவடிக்கைகளில் இருந்து விலகியிருக்கவும் ரெலோ தீர்மானித்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

## வாரியார் வருகிறார்

[கொழும்பு]

திருமுருக கிருபானந்த வாரியார் கொழும்பு வருகை தரவுள்ளார்.

இம் மாதம் பதின்மூன்றாம் திகதி கொழும்பு வருகிறார்.

## சமுகமளிக்கவும்

யாழ். மாவட்டத்தில் இருக்கும், அனைத்து பிரதேச தொலைக் கல்வி நிலையங்களிலும் 91/93 ஆண்டு காலப் பகுதியில் பயிலுநர் ஆசிரியர்களாக பயில்வோர் அனைவரும் இன்று திங்கட்கிழமை தத்தமக்குரிய நிலையங்களுக்கு சமுகம் தர வேண்டுமென பிரதிக் கல்விப் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். எதிர்வரும் மார்ச் 20-ம்,21-ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் தொலைக்கல்வி பரீட்சை தொடர்பாக இணைப்பாளர் என்ற வகையில் பேசுவதற்காகவே இச் சந்திப்புக்கு ஒழுங்கு செய்யப்படுவதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

## பொதுக்கூட்டம்

இணுவில் மருட்டி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் சந்திரகுமார் தலைமையில் இன்று பிற்பகல் 3 மணிக்கு கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் நடைபெறும். [யோ]

## ஆதாரம் காட்டிப் பெறவும்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சந்தைப்பகுதியில் அமைந்துள்ள திரவியம் பிரான்சீஸ் என்பவரது மண்ணெண்ணெய் கடையில் கடிகாரமொன்று தவறவிடப்பட்டிருந்தது. இக்கடிகாரம் அக்கடை உரிமையாளரினால் எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் வந்து ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## நினைவு கூருகின்றோம...

**1993-2-01**

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னார்- பள்ளமடுப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

2-ம் லெப். பீரிஸ் (மனுவேல் ஞானப்பிரகாசம் - கர்த்தர் கோவிலடி, பரப்புக் கடந்தான், வட்டக்கண்டல்- மன்னார்)

ஜெராட் (ஜாங்கோசு இராசலிங்கம் - பெரியகடை, மன்னார்)

1987ஆம் ஆண்டு மட்டு - திக்கோடைப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

2-ம் லெப். செந்தூரன் (சிவகுரு சத்தியநாதன்- பழுகாமம் - மட்டு.)

1988-ம் ஆண்டு மட்டு - வவுணதீவுப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

எஸ். பி. (சாமியப்பு றெமசிவா - காரைதீவு- 02- அம் பாறை)

முல்லை - ஒட்டிசுட்டான், முத்தையன்கட்டுப் பகுதியில் இந்தியப்படையினர் சுற்றி வளைத்து மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

றோஸ்மென் (சி. பாஸ்கரன் - கனகரத்தினபுரம், இடதுகரை முத்தையன்கட்டு ஒட்டிசுட்டான் - முல்லை.)

1989ஆம் ஆண்டு மன்னார் - பண்டிவிரிச்சான் பகுதியில் மிதிவெடியிற் சிக்கிச் காயமுற்ற நிலையில் சயனைட் உட்கொண்டதில் எமைப்பிரிந்த

குணம் (செல்லையா ரவீந்திரராசா - செட்டிகுளம்- வவுனியா)

கிளிநொச்சி - அக்கராயன்குளம் பகுதியில் பெருந்திற்காகக் காத்து நின்றபோது இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட அதே மாவட்டத்தைச் சேர்ந்த 4 தமிழ் விவசாயிகள் மற்றும் யாழ் - சுழிபுரத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-5908)

# கலாசார விருத்தி தசாப்தம் சர்வதேச புகைப்பட போட்டி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச கலாசார விருத்தித் தசாப்தத்தை முன்னிட்டு யூனெஸ்கோவும், ஆசிய கலாசார நிறுவனமும் இணைந்து நடாத்தும், சர்வதேச புகைப்படப் போட்டிக்குரிய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

போட்டிக்குரிய தலைப்பு 'குடும்பம்' என்பதாகும். 10 × 12 அங்குலங்களுக்கு பெரியதாக இல்லாமலும், 8 × 10 அங்குலங்களுக்கு குறைவடையாமலும் இருக்க வேண்டும். எனினும் படங்கள் கறுப்பு, வெள்ளையாகவோ அல்லது கலராகவோ அமையலாம். முதற்பரிசு ஐயாயிரம் அமெரிக்க டாலர்களும், இரண்டாம் பரிசு ஆயிரம் அமெரிக்க டாலர்களும் வழங்கப்படவுள்ளது. அத்துடன் 120 ஆறுதல் பரிசுகளும் வழங்கப்பட இருக்கின்றது.

இப்போட்டியில் கலந்து கொள்ள ஆர்வமுள்ள புகைப்படக் கலைஞர்கள் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கும் மேலதிக விபரங்களுக்கும், யாழ்ப்பாண பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் இரா. சிவசந்திரன் அவர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

யாழ். திறந்த பல்கலைக்கழகத்தில்

# நிறுத்தப்பட்ட கற்கை நெறிகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும்

-மாணவர் நலன்புரி அமைப்பு கோரிக்கை

யாழ்ப்பாணம் திறந்த பல்கலைக்கழகத்தில் வடபகுதி நிலைமைகளைக் காரணம் காட்டி இடைநிறுத்தப்பட்ட அனைத்து பாடநெறிகளையும் மீண்டும் ஆரம்பிக்குமாறு இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலைய மாணவர் நலன்புரி அமைப்பு கோரியுள்ளது.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட வேண்டிய சகல கற்கை நெறிகளையும் மீண்டும் ஆரம்பித்து அவற்றிற்குரிய பரீட்சைகளையும் நடத்த வேண்டும். அத்துடன் புதிய மாணவர்களை சேர்த்துக்கொண்டு பாடநெறிகளுக்கான பணியாளர்களையும் புதிதாக சேர்ப்பதற்கு அனுமதி அளிக்க வேண்டும் எனவும் அக் கோரிக்கையில் மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பு அபிவிருத்திக்கு கனடா உதவியளிக்கும்

(மண்டூர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்திக்கு உதவிகளை அளிப்பதற்கு அண்மையில் மட்டக்களப்புக்கு விஜயம் செய்த கனடா தூதுவர் லென்னா ஜே. பிளவ்ஸ் மட்டக்களப்பு அரச அதிபர் இ. மோனகுருசாமியை கச்சேரியில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

மட்டு மாவட்டத்தில் கூடுதலாக மீனவர் வாழ்வதால் அவர்களுக்கு தோணிகளையும் மீன்பிடிவலைகளையும் வழங்குமாறு அரச அதிபர் கேட்டுக் கொண்டதற்கு அமைய ஒவ்வொன்றும் 2 இலட்சம் பெறுமதியான 19 அடி நீளமான நூறு தோணிகளையும் இரு நூறு வலைகளையும் வழங்குவதற்கு தூதுவர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு பிரிகேடியர், பொலிஸ் அதிகாரி, திருமலை-மட்டு நகர் ஆயர் அதி வண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆகியோரையும் கனடா தூதுவர் சந்தித்துப் பேசினார்.

# 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மண்ணில் 08 – 07 – 1920

விண்ணில் 03 – 01 – 1993

உயர்திரு

**கந்தையா வேலும்மயிலும்**

இன்பருட்டி

திதி: 02-02-1993

உயிர் தந்தாய் உதிரம் தந்தாய்
உயர்வான வாழ்வு தந்தாய்
வையகம் தன்னில் மறவாதிருக்க
இதயம் நிறைந்த பாசம் தந்தாய்

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி: சின்னமாமயில்,
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

நாளை 02-02-1993 செவ்வாய்க்கிழமை காலை நடைபெறும் கிருத்தியங்களிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இன்பருட்டி,
அல்வாய் வடக்கு,
அல்வாய். – குடும்பத்தினர்

(4189)

திருமலை - மூதூர் படகு விபத்து

# பாதாளமலை பகுதியில் எழுந்த ராட்சத அலை படகை கவிழ்த்தது

- சம்பவத்தில் உயிர்தப்பியவரின் பயங்கர அனுபவம்

(கொழும்பு)

கடல் மிகவும் கொந்தளிப்பாக காணப்பட்டது. காற்றும் பலமாக வீசியது. அச்சமயத்தில் இராட்சத அலையொன்று மிகஉயரத்தில் மேலெழுந்து படகைத் தாக்கியது. அதனால் படகு கவிழ்ந்தது.

இவ்வாறு கடந்த திங்களன்று திருக்கோணமலையில் இடம்பெற்ற படகு விபத்து பற்றி அப்படகில் பயணம் செய்த வர்த்தகர் ஒருவர் கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில், திங்களன்று பிற்பகல் மூன்று மணியளவில் 110 பேருடன் திருக்கோணமலைத் துறைமுகத்திலிருந்து புறப்பட்ட எமது படகு சுமார் ஒரு மணிநேரம் பயணம் செய்த பின்னர் பாதாள மலைப்பகுதியை அடைந்தது. அப்போது இராட்சத அலை தாக்கியதால் படகு கவிழ்ந்தது என்று தெரிவித்தார். அத்துடன் சுமார் நாற்பது பேரே பயணம் செய்யக்கூடிய இப்படகில் 110 பேர் ஏற்றிச் செல்லப்பட்டனர் எனவும், படகின் மேற்றளத்தில் மட்டும் சுமார் நாற்பது பேர் இருக்கக்காணப்பட்டனர் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் படகு கவிழ்ந்த சமயம் மேற்தளத்திலிருந்தோர் கடலில் குதித்து நீந்தத்தொடங்கினர். அலையின் திசைக்கு அடித்துச்செல்லப்பட்ட போது கூக்குரல்கள் பெரியளவில் எழும்பின என்றும் அவர் குறிப்பிட்டார்.

மூதூர் இறங்குதுறையிலிருந்து திருமலை நோக்கிச்சென்று கொண்டிருந்த படகு, மூழ்கித் தத்தளிப்பவர்களைக் காப்பாற்றும் நோக்கில், உயிர்காப்பு கயிற்றை எறிந்த போதும் பலர் அதனைப் பற்றிப்பிடித்துக் கொண்டதனால் அப்படகிலிருந்த பயணிகள் கூச்சலிடத் தொடங்கி விட்டனர் பின்னர் அவர்கள் தமது முயற்சியைக் கைவிட்டு பயணத்தைத்தொடர கிண்ணியாவிலிருந்து வந்த மீனவர்கள், பலரைப் பாதுகாத்து தமது படகுகளில் ஏற்றிக் கொண்டனர்.

அப்பத்துக்குள்ளான படகில் பயணம் செய்தோரில் முப்பது பேர் மட்டுமே உயிர் தப்பியுள்ளனர். பதினேழு பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. எஞ்சியோரைத் தேடும் பணி தொடர்ந்த போதும் எவரும் மீட்கப்பட்டதாக இல்லை. இறந்தவர்களில் அடையாளம் காணப்பட்ட பத்துப் பேரின் விபரங்கள் வருமாறு:

சாகுல் ஹமீட் (ஆலைச் சேனை, கிராமோதய சபைத் தலைவர்) அப்துல் குத்தூஸ் (வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை - மூதூர்) பாலன் காளியம்மா (தேவாலய வீதி, மூதூர்) நடேசபிள்ளை மகேஸ்வரி (தேவாலய வீதி, மூதூர்) அப்துல் ஹமீட் அமானுல்லா (அதிபர் அல்லை நகர் ம. வி.) கே. சகுந்தலாதேவி (சேனையூர்) சாந்தினி (கட்டைப் பறிச்சான்) பாக்கியராஜா மாலினி (ஒன்பது மாதக் குழந்தை) மாரிமுத்து கணபதிப்பிள்ளை (சேனையூர்)

அத்துடன் இச்சம்பவத்தில் சிக்கிய எஸ். சிவஞானம் (நீதிமன்றவீதி, திருகோணமலை) குருகுலதாஸ் (59 ஆம் கட்டை அகதிமுகாம்) ஆகியோர் திருமலை கடற்படைத்தள வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# உலகத் தமிழர் மாநாடு

உலகத் தமிழர் இரண்டாவது மாநாடு எதிர்வரும் மார்ச் மாதம் 5ஆம், 6ஆம், 7ஆம் திகதிகளில் சென்னையில் உள்ள காமராசர் அரங்கில், உலகத் தமிழர் மாமன்றத்தின் ஏற்பாட்டிற்கமைய நடைபெறும்.

## பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

40594169V எனும் இலக்கமுடைய செல்லம்மா விநாசித்தம்பி (கோவில் வயல் இயக்கச்சி) என்பவரின் அடையாள அட்டை கிளாலிப் பகுதியில் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் வந்து பெற்றுக்கொள்ளவும்.

## ஆதாரம் காட்டிப் பெறவும்

முக்கிய சில ஆவணங்களுடன் ஒரு பை நல்லூர் வீதியில் இருந்து சி. பஞ்சாட்சரம் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு எமது பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப்பெற்றுக்கொள்ளவும்

## கண்காட்சி

(வடமராட்சி)

கரவெட்டி இலங்கை செஞ்சிலுவைச்சங்க நிலுவலகத்தில தையல் பொருள்கள் கண்காட்சி வைபவம் கடந்த வியாழனன்று காலை 9 30 மணி முதல் மாலை 5.00மணி வரை நடைபெற்றது.

கரவெட்டி திரு இருதயக் கல்லூரி ஆசிரியர் திருமதி தணிகாசலம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். நெல்லியடி கொத்தணி பாடசாலை அதிபர்களின் ஆசியுரையுடன் கண்காட்சி ஆரம்பமானது.

தையல் பயிற்சியை முடித்து வெளியேறவுள்ள மகளிர்களால் தைக்கப்பட்ட கைக் குழந்தைக்கான சட்டை, குழந்தைகளுக்கான குடை வெட்டுச்சட்டை, சங்கூடு, பெண் குழந்தைகளுக்கான சுருக்குச் சட்டை, ரியூனிக் சேட், கட்டைக் காற்சட்டை பிளவுஸ் ரியூனிக் காற்சட்டை ஆகியவை கண்காட்சியின் போது வைக்கப்பட்டிருந்தன.

(யோ)


ஈழநாதம்

3ஆம் ஆண்டு நிறைவுப் போட்டி

சிறுகதை, கவிதை, கருத்துப்படம்

முதலாம் பரிசு: தங்கப்பதக்கத்துடன் கூடிய 1500ரூபா ரொக்கப் பணம்.

இரண்டாம் பரிசு: 1500 ரூபா ரொக்கப் பணம்

மூன்றாம் பரிசு: 1000 ரூபா ரொக்கப் பணம்.

போட்டியில் பங்குபற்றி பரிசில்களை வெல்லுங்கள்

முடிவு திகதி: 05/02/1993






UNIKCO COMPUTER CENTER

BASIC dBASE III+
LOTUS 1-2-3
WORD PROCESSING

ஆரம்பம்: Week Day 5-2-93
Week End 6-2-93

★ தனிப்பட்ட முறையில் 40 மணித்தியாலயத்திற்கு குறையாத செய்முறை பயிற்சி அளிக்கப்படும்.


மேலதிக விபரங்களுக்கு

No. 37, CLOCK TOWER ROAD JAFFNA

(வெலிங்டன் சந்திக்கு வடக்குப் புறமாக மேல் மாடியில்)

(சி/5913)

# 31ஆம் நாள் நினைவலைகள்



அமரர்
**சதாசிவம்**
**பாலசுப்பிரமணியம்**
**(துரை)**
(சரஸ்வதி பேக்கரி உரிமையாளர் கொடிகாமம்)

**மண்ணில்**
**16.05.1951**

**மனதில்**
**02.01.1993**

துள்ளு நடையெங்கே
துரையேயுன் சிரிப்பெங்கே
கள்ளமிலா முகமெங்கே
கவினூறும் பேச்செங்கே
உள்ளமிலா உலுத்தர்கள்
உவர்கடலாம் கிளாலிதனில்
நள்ளிரவில் நரிச்செயலால்
நாயகனை மறைத்தனரோ?

❋ ❋ ❋

நெஞ்சிருக்கும் வரையுந்தன்
நினைவிருக்கும் ஈழமதில்
அஞ்சியஞ்சிச் சாநிலைக்கு
அகலவு வரும் ஆருயிரே
வெஞ்சமரென் றுருவாகும்
விஞ்சுபுலி யணிவெல்லும்
நஞ்சனையோர் செயலொழிய
நாம்பாய்வோம் கண்வளராய்

– கிளாலிக் கடற்பாதகத்திற் பலியான எங்களது – ஈழமக்கள் அனைவருக்கும் இது எங்கள் காணிக்கை.

"சரஸ்வதி இல்லம்"
பருத்தித்துறைவீதி, கொடிகாமம். (சி-5896)

**– மனைவி, பிள்ளைகள்**

---

**அலைகடலில் அணைந்த எம்**
**தலைவணங்கா ஒளிவிளக்கு!**

## நெஞ்சநெகிழும் 31ஆம் நாள் நினைவலைகளும் அந்தியேட்டி அழைப்பும்

உயர்திரு
**அமரர் செல்லையா சுப்பிரமணியம்**
(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)



அவனியில் இணைவு
1928 - 04 - 3

ஆழியில் அணைவு
1993 - 01 - 2

ஓ ! எங்கள் உயிரே
உறவுக்காய் உவகையுடன்
உயர் பணிகள் ஆற்றி நின்ற
திருவே எம் திகளொளியே!
கிளாலிக் கடலுன்னை
எம்மை விட்டுப் பிரித்ததுவோ?
ஊருக்காய் உழைத்திட்ட உத்தமனே!
சன்சோனிக் கமிசன் முன்
தலை நிமிர்ந்து நின்று
தமிழர் நிலை சொன்னவனே!
காலத்தால் அழியாத காவியமே!
அணைந்தும் அணையாத அகல்
விளக்கே!
உன் நாமம் எம் நெஞ்சில்
என்றும் மறையாது – எம்
ஆத்ம அஞ்சலிகள்

02 – 01 – 1993 சனிக்கிழமை கிளாலிக் கடலில் அகால மரணமடைந்த எமது அருமை அப்பா திரு. செல்லையா சுப்பிரமணியம் அவர்களின் வீட்டுக்கிருத்திய வைபவம் இன்று 01 – 02 – 93 திங்கட்கிழமை அமரரின் இல்லத்தில் 11.00 மணி அளவில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருஞ் சமூகம் தந்து அமரரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்குமாறும்தொடர்ந்து மதியபோசன வைபவத்தில் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

'ஆத்மசாந்திக்கு எம் அஞ்சலிகள்'

(02-01-1993 அன்று கிளாலிக்கடலில் கொடியவரால் கொலையுண்ட அனைத்து மக்களையும் அஞ்சலிக்கின்றோம்)

இங்ஙனம்
மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்

அண்டிவீதி, கொடிகாமம் (4160)
93-02-01

## சிந்தனைக்கு

தந்தை தொடங்கித் தனையன் தொடர,
தணியாது நடக்கும் விடுதலைப் போர்,
தடைபட்டுத் திகைப்பினும் இறுதியில்
தலையாய வெற்றி எய்துவது திண்ணம்.

- பைரன் பிரபு

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 01 - 02 - 1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் - 05

# சிங்களக் கட்சிகளே பதில் கூறவேண்டும்

"விடுதலைப் புலிகளின் நல்லெண்ண சமிக்கையுடன் தென்னிலங்கைக்கு வந்தேன். இந்தப் பணியைத் தொடர்ந்து செய்வதா? அல்லது பணியை நிறுத்துவதா? என்பதை தென்னிலங்கை அரசியல் வாதிகளே தீர்மானிக்க வேண்டும்" இவ்வாறு அண்மையில் யாழ். வந்து திரும்பிய அங்கிலிக்கன் ஆயர் அதி வண கென்னத் பெர்னாண்டோ பத்திரிகை ஒன்றுக்களித்த பேட்டியில் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் சமாதான நல்லெண்ண சமிக்கைகளை அனுப்பியது இது முதல் தடவை அல்ல. கடந்த சுமார் ஒன்றரை வருட காலமாக இனப்பிரச்சினைக்கு சமாதான முறையில் அரசியல் தீர்வு காண்பது குறித்து நல்லெண்ண சமிக்கைகளை அனுப்பியவாறே உள்ளனர். சுருக்கமாகக் கூறினால் ஒவ்வொரு நல்லெண்ண சமாதானத் தூதுக்குழுக்கள் வரும் போதும், சமாதானத்திற்கான சமிக்கைகள் அனுப்பப்பட்டன என்றே கூறலாம். அதாவது தமிழ் மக்களோ, அன்றி விடுதலைப்புலிகளோ போதிய அளவில் சமாதானத்திற்கான சமிக்கைகளைக் காட்டியுள்ளனர் என்றே கொள்ளலாம்.

ஆனால், இதில் எதையும் சிறிலங்கா அரசாங்கமோ, தென்னிலங்கை அரசியல்வாதிகளோ கருத்தில் கொள்ளவில்லை. மாறாக சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடும் விதத்திலும், இராணுவ அடக்குமுறையையும், தாக்குதல்களையும் தீவிரமாக்கும் முயற்சியிலும் ஈடுபட்டனர்; ஈடுபட்டும் வருகின்றனர்.

இந்நிலையில் அதி. வண. கென்னத் பெர்னாண்டோ கூறியது போன்று சமாதானத்திற்கான பணி தொடர்வதா இல்லையா என்பதை தென்னிலங்கைஅரசியல் வாதிகளே இனித்தீர்மானிக்க வேண்டும். அவ்வாறு அவர்கள் ஒரு தீர்க்கமான அறிவிப்பை வெளிக்காட்டாத போது இனப்பிரச்சினைக்கு ஒரு சமாதானதீர்வோ, அன்றி அரசியல் தீர்வோ ஏற்படுவதற்கான வாய்ப்பு இல்லை என்று திட்டவட்டமாகத் துணிந்து கூறலாம்.

இதேவேளை அரசியல்வாதிகள் பேச்சுக்களின் போது தெரிவிக்கும் சமாதானம் பற்றிய அறிவிப்புக்களும், விரைவான தீர்வு குறித்த திட்டங்களும் இனப்பிரச்சினைக்கு சமாதான ரீதியான அரசியல் தீர்வைப் பற்றியதான அறிவிப்புக்களாகத்தெரியவில்லை. அவை இராணுவ ரீதியான அணுகுமுறை குறித்த அறிவிப்புக்களாகவே உள்ளன.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் 'குப்பை' மலிவு விலையில் கிடைக்கும் ஆயுதங்களும், மற்றும் சில இராணுவ அதிகாரிகளின் போலித்தனமான உறுதிமொழிகளும் ஒருபோதும் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வை கொண்டுவந்து விடப்போவதில்லை. இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு என்பது நடைமுறைச் சாத்தியப்பாடு அற்றதென்று கடந்தகால வரலாறே தெளிவாக உணர்த்தக்கூடியது. 1991 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், இராணுவ தீர்வில் கணிசமான தூரம் முன்னேறிவிட்டடதாகவும், சில மாதங்களில் வெற்றி கிடைப்பது உறுதி என்ற நம்பிக்கையில் இருந்த இராணுவம், 1992 இறுதியில் பாரிய இழப்புக்களுடன் நிலைகுலைந்து சீரமைப்புச் செய்யவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டமையில் இருந்தே இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு சாத்தியமற்றதொன்று என்பதை தெளிவாக அரசு புரிந்துகொண்டிருக்கலாம்.

இந் நிலையில், இனப்பிரச்சினைக்கு தீர்வென்றால், அது சமாதானத்துடன் கூடியஅரசியல் தீர்வாகவே இருக்க முடியும் என்பதை அரசு புரிந்து கொள்ள வேண்டும். அத்தோடு, அதைநோக்கிய நகர்வும் சிங்கள அரசியல் கட்சிகளிடம், குறிப்பாக ஆட்சியில் இருக்கும் ஐக்கிய தேசிய கட்சியிடமே உள்ளது என்பதையும் அரசாங்கம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

# சட்டமன்றஉறுப்பினர் உட்பட அரச அதிகாரிகள் கடத்தல்

## - ஆந்திர மாநிலத்தில் நக்ஸலைட்டுக்கள் கைவரிசை

(டில்லி)

ஆந்திரப் பிரதேசத்தின் விசாகப்பட்டினம் மாவட்டத்தில் கொல்லூரி என்னும் இடத்திற்கு அருகே காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினரான பச்சப்புள்ளி ரெட்டி பவராஜ உட்பட ஆந்திரப் பிரதேச மாநில அதிகாரிகள் ஒன்பது பேர் மக்கள் போராட்டக்குழு என்னும் இயக்கத்தினரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

இந்த சட்டமன்ற உறுப்பினரும், அரச அதிகாரிகளும் பொதுக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டுவிட்டு திரும்பிக்கொண்டிருக்கையில் ஆயுதம் தாங்கிய சுமார் பதினேழு பேர் அடர்ந்த வனப்பகுதி ஒன்றில் வைத்து அவர்களை வழிமடக்கிப் பிடித்ததாகக் கூறப்படுகிறது.

பின்னர் இந்தத் தீவிரவாதிகள் கடத்தப்பட்ட அரச அதிகாரிகளில் இருவரை விடுதலை செய்ததுடன், பொலிசாரால் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டிருக்கும் தமது உறுப்பினர்கள் நால்வர் விடுதலை செய்யப்பட வேண்டும் எனக் கோரியுள்ளனர்.

# அ.தி.மு.கவுடன் கூட்டணி

## பாரதீய ஜனதா முடிவு

[டில்லி]

தேசிய அளவில் தனித்துப் போட்டியிடவும், மாநில அளவில் செல்வாக்குப் பெற்ற தலைவர்களை தங்கள் அணியில் சேர்த்துக்கொள்ளவும் பாரதீய ஜனதாக் கட்சி முடிவு செய்துள்ளது

அயோத்தியா சம்பவங்களைத் தொடர்ந்து பாராளுமன்றத் தேர்தலை நடத்தும்படி பாரதீய ஜனதாக் கட்சி வலியுறுத்தி வருவது தெரிந்ததே.

இதனால் தேர்தல் வந்தால் அதனை சந்திக்கும் வகையில், தமிழ் நாட்டில் ஜெயலலிதா தலைமையிலான அ. இ. அ. தி. மு. கவுடனும், ஆந்திரப் பிரதேசத்தில் ராமராவ் தலைமையிலான தெலுங்கு தேசத்துடனும், பஞ்சாப்பில் அகாலி தளத்தோடும், தேர்தல் கூட்டணிக் வைத்து கொள்ள முயற்சி மேற்கொண்டு வருகின்றது என நம்பகமாகத் தெரியவருகின்றது. இதே வேளை மேற்கு வங்கத்தில் இடதுசாரி அரசுக்கு எதிராக போர்க்கொடி தூக்கியிருக்கும் முன்னாள் மத்திய அமைச்சர் செல்வி மம்தா பானர்ஜியையும் பாரதீய ஜனதா ஆதரிப்பதாக தெரியவருகின்றது.

மாவீரர்

னை பிரசுரம் மூலம் வேண்டுகோள்விடுத்துள்ளது.

இதன் மூலம் மாவீரர் வாரத்தை, மாவீரர் நாளை முழுநிறைவான திருநாட்களாக நடாத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தமிழீழ மக்களை வேண்டியுள்ளது.

இப்பிரசுரத்தில் மேலும்

தமிழீழத்தின் விடிவுக்காக, தமிழீழ மண்ணின் விடுதலைக்காக, தம்மை ஒப்புக் கொடுத்து, தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தம்மை இணைத்துக்கொண்டு, களத்தில் இறங்கிப் போராடி, தங்கள் இன்னுயிரை ஈந்து வீரச்சாவைத் தழுவிய பல்லாயிரக் கணக்கான மாவீரர்களை நினைவு கூருகின்றவகையிலே, அவர்களது அருஞ்செயல்களை, வீரதீரங்களை, ஈகங்களை, வெளிக்கொண்டு வந்து, அவர்களை ஏற்றிப் போற்றுகின்ற வகையிலே, நவம்பர் 27 ஆம் நாளை ஆண்டுதோறும் மாவீரர் நாளாக, தேசியத் திருநாளாக, மக்கள் எழுச்சி நாளாகக் கடைப்பிடிப்பதென எமது தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களால் அறிவிக்கப்பட்டு, 1989 ஆம் ஆண்டு முதல் மாவீரர் நாள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

1989 இல் முதன் முதல் மாவீரர் நாளை தேசியத் திருநாளாக தமிழீழ மக்கள் எழுச்சியுடன் கடைப்பிடித்தனர். தமிழீழ மாவீரரை நினைவு கூருவதிலும், அவர்களை ஏற்றிப் போற்றுவதிலும், அவர்களது அருஞ்செயல்களை வெளிக்கொணர்வதிலும் தமிழீழ மக்கள் வெளிப்படுத்திய பேரார்வம் எல்லையற்றதாக இருந்தது. ஆயிரக்கணக்கான மாவீரர்களை நினைவு கூருவதிலும் தமிழீழ மக்கள் தமது எழுச்சியை, ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கு ஒரு நாள் போதாதென்ற நிலையில், 1990 ஆம் ஆண்டில் இருந்து நவம்பர் 21 - 27 வரையான ஏழு நாட்கள் மாவீரர் வாரமாக அறிவிக்கப்பட்டு ஆண்டுதோறும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

மாவீரர் நாளோ மாவீரர் வாரமோ தமிழீழத்தின்தேசிய திருநாளாக ஆகிவிட்ட நிலையில் சென்ற ஆண்டு நடைபெற்றுமுடிந்த மாவீரர் வாரத்தின் நிகழ்வுகள் நிறைவானவையாக இருந்தனவா? அல்லது அவற்றில் ஏதாவது மாற்றங்கள் தேவையா? திருத்தவேண்டிய குறைபாடுகள் நீக்கவேண்டிய தவறுகள் இருந்தனவா? என்பவை பற்றி தமது எண்ணக் கிடக்கைகளை வெளிப்படுத்துவது தமிழீழ மக்கள் ஒவ்வொருவரினதும் கடமையும் உரிமையுமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெளிநாட்டவரைவெளியேற மலேசிய அரசு உத்தரவு

மலேசியாவில் வர்த்தகத்தில் ஈடுபட்டுவரும்அனைத்து வெளிநாட்டவர்களையும் உடனடியாக வெளியேறுமாறு மலேசியஅரசு உத்தரவிட்டுள்ளது.

மலேசியாவின் முக்கிய நகரங்களில் இந்தோனேசியா, தாய்லாந்து, பங்களாதேஷ், பாகிஸ்தான், இந்தியா, இலங்கை, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்கள் வர்த்தகத்தில் ஈடுபட்டிருப்பது தெரிந்ததே.

இவர்கள் சட்டத்துக்கு முரணாக அங்கு பெருமளவு வர்த்தக நிலையங்களை ஆரம்பித்து நடத்துவதாகவும் மிக அண்மைக் காலம் முதல் இதன் எண்ணிக்கை மிக வேகமாக அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இதனால் மலேசிய மக்கள் தமது பொருளாதார நிலை பாதிக்கப்படலாம் என அஞ்சுவதாலேயே இந்நிலைஏற்பட்டுள்ளதாகதெரிவிக்கப்படுகிறது

மலேசிய தோட்டங்களில் வேலைசெய்வதற்கென வெளி நாடுகளில் இருந்து அழைத்து வரப்பட்ட 3 இலட்சத்து 74 ஆயிரம் பேரில் பலர் அரசின் அனுமதியின்றி வர்த்தகத்தில் ஈடுபடுவதாக கூறப்படுகின்றது

# ரஷ்ய அதிபர் மீது கொலை முயற்சி

ரஷ்ய அதிபர் பொறிஸ் யெல்ட்சினைக் கொலை செய்யும் முயற்சியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இராணுவ மேஜர் ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பதாக மொஸ்கோவில் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

நாட்டின் தொலைதூரக் கிழக்குப் பகுதியிலிருக்கும் இராணுவ முகாமொன்றைச் சேர்ந்த இவர் தமது முயற்சியை செயற்படுத்துவதற்காக மொஸ்கோ வந்ததாகவும் அச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது.

தமிழர்

இனப்பிரச்சினையை அரசியல் வாதிகள் ஒரு துரும்பாகப் பாவிக்கிறார்கள். அதை அனுமதிக்க முடியாது என்றார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், தமிழ் மக்கள் இன்று எதிர்நோக்கியுள்ள அனைத்துப் பிரச்சினைகளையும் ஜனாதிபதி பிரேமதாசா அவர்களுக்கு எதிர்வரும் 11 ஆம் திகதி நான் சந்திக்கும் பொழுது எடுத்துரைக்கவுள்ளேன். நான் முன்வைக்கும் பிரச்சினைகளைச் செவிமடுத்து அவற்றிற்குரிய தீர்வை அவர் வழங்காது உதாசீனம் செய்தால், இலங்கைக்கு உதவும் நாடுகளுக்கு தமிழர்கள் பிரச்சினையை எடுத்துக்கூறி அதன் மூலம் சர்வதேச மட்டத்திலான அழுத்தத்தை அரசுக்கு ஏற்படுத்தலாம் என்பது எனது தீர்மானமாகும் என்றும்,

1983 இல் கொழும்பிலும், இலங்கையின் தென்பகுதியிலும் இனக்கலவரம் ஏற்பட்டு தமிழருக்கு எதிரான வன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டசமயம் இலங்கைக்கு உதவும் மேற்கு நாடுகளும், உதவும் அமைப்புகளும் அரசை எச்சரித்தன. மீண்டு ஒருமுறை இனக்கலவரம் தலை தூக்கினால் தாம் தொடர்ந்தும் உதவி வழங்கப்போவதில்லை என்று உதவி வழங்கும் நாடுகளும், அமைப்புகளும் அரசுக்குத் தெரியப்படுத்தியதை அரசு உணரவேண்டும் என்றும்,

இராணுவ நடவடிக்கை மூலம் நிலப்பரப்பைக் கைப்பற்றினால் கைப்பற்றலாம். ஆனால், இராணுவ நடவடிக்கையின் மூலம் அரசினால் இலங்கையின் இனப்பிரச்சினைக்கான நிரந்தரமான தீர்வை எட்ட முடியாது என்றும் தெரிவித்தார்.

மேலும் அவர் வடக்கு-கிழக்கு யுத்தத்தினால் சிந்தப்படும் இரத்தம் முழு நாட்டுக்குமே ஆபத்தை ஏற்படுத்தும் என்பதை அரசு உணர்ந்து கொள்ளவேண்டும். யுத்தம் அதன் போக்கில் நீடிக்கும் பட்சத்தில் சிங்களவர்-தமிழர் மத்தியில் ஒரு சந்தேக சூழ்நிலை உருவாகிப் பதற்றம் ஏற்பட்டு நாடு பெரும் பாதிப்புக்கு உள்ளாகும் என்றார்.

இராணுவ நடவடிக்கையினால் ஒருவர் மரணமடைந்தால் நாம்அயல் வீட்டுப் பிரச்சினைஎன்று இருக்கக் கூடாது. எங்கள்வீட்டில்அப்படிஒருசாவு சம்பவித்தால் நாம் துன்பத்தில் பங்கு கொள்வது போல் இப்போது நிகழும் துன்பங்களைப் பொதுப்பிரச்சினையாக கருதி நாம் சம்பந்தப்பட்டால் அது ஒரு தீர்வுக்கான வழியாக அமையும் என்றும் குறிப்பிட்டார் (நி)

மூதூர்

[வயது 22], வேலாயுதம் சிறீஸ்கந்தராசா [வயது 40], சிவசேகரம் வேந்தன் [வயது 17], முத்துக்குமார் லிங்கேஸ்வரன் [வயது 38], பொன்னையாப் பிள்ளை [வயது 16].

## குச்சவெளி பொலிசார் மீது புலிகள் தாக்குதல்

திருக்கோணமலை குச்சவெளிபொலிஸ் நிலையத்தின் மீதுவிடுதலைப்புலிகள் கடந்த புதன் கிழமை அதிகாலையில் நடாத்திய திடீர்த்தாக்குதலினால் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றும் ஐந்து பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் காயமடைந்துள்ளனர்.

இவ் இருதரப்பினருக்கிடையேயும் சுமார் ஒரு மணி நேரம் துப்பாக்கிச்சமர் நடந்ததாகவும். காயமடைந்த ஐந்து பொலிஸ் உத்தியோகத்தர்களும் அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் கொழும்பில் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## கலை நிகழ்ச்சி கால மாற்றம்

[யாழ்ப்பாணம்]

விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட கலை பண்பாட்டுக் கழகத்தினரால் நேற்று யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடாத்தப் படவிருந்த கலைநிகழ்ச்சிகள் தவிர்க்க முடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சிக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என நிகழ்ச்சி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## ஆர்.எஸ்.எஸ். அமைப்பிற்கு புலிகள் பயிற்சியாம்

(கொழும்பு)

இந்தியாவில் தடை செய்யப்பட்ட இந்துமத அமைப்பான ராஷ்டிரிய சுயம் சேவக் எனப்படும் ஆர். எஸ். எஸ். அமைப்பிற்கு விடுதலைப் புலிகள் தமிழ் நாட்டிலும், ஆந்திரப் பிரதேசத்திலும் முகாம் அமைத்து ஆயுதப் பயிற்சி அளித்து வருவதாகத் தெரிய வருகிறது என ஐலண்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

சென்னையிலிருந்து வெளியிடப்படும் நக்கீரன் சஞ்சிகையை மேற்கோள் காட்டி ஐலண்ட் வெளியிட்ட மேற்படி செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது, விடுதலைப் புலிகளும், ஆர். எஸ். எஸ். அமைப்பைப் போலவே முஸ்லிம்களுக்கு எதிரான போக்கை கொண்டிருப்பதாகவும், விடுதலைப் புலிகளால் பயிற்றப்பட்டவர்கள் விஷ்வ இந்து பரிஷத் என்னும் மற்றொரு தடை செய்யப்பட்ட அமைப்பின் ஆதரவுடன் பள்ளிவாசல்களை தகர்க்க முனைந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

## கொமாண்டோ பிரிவிற்கு ஆட்சேர்ப்பு ஆரம்பம்

இராணுவத்தின் முதலாவது கொமாண்டோ படைப் பிரிவுக்கான ஆட்சேர்ப்பு கடந்த செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக இராணுவப் பேச்சாளர் ஒருவர் கூறினார். கனேமுல்லையில் இருக்கும் இராணுவத் தலைமையகத்திலும், வெலிஓயா மற்றும் கிழக்குப் பிராந்தியதலைமையகத்திலும் இதற்கான நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

## திருநாள்

காணிக்கை (புதுமை) மாதா திருநாள் இம்மாதம் 3- ஆம் திகதி புதன்கிழமை காலை 6. 30 மணிக்கு நடைபெறும். திருநாள் பாடல் கூட்டுத்திருப் பலியில் யாழ். ஆயர் கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கலந்து சிறப்பிப்பார்.

திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூப பவனி ஆலயத்தை சுற்றி நடைபெறுவதுடன் திருநாள் வைபவங்கள் நிறைவுபெறுமென பங்குத் தந்தை வண. பி. எம். இம்மனுவேல் அடிகள் அறிவித்துள்ளார். (21)

## ஆனையிறவு முகாம் சிப்பாய் அம்பலாங்கொடையில்கைது

ஆனையிறவு இராணுவ முகாம் 87-வது பீரங்கிப் பிரிவைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் அம்பலாங்கொடையில் கைது செய்யப்பட்டார். ஜனவரி 18ஆம் திகதி அம்பலாங்கொடையில் வீடொன்றின் மீது கைக்குண்டு வீசிச் சேதம் ஏற்படுத்தியற்காகவே இவர்கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வவுனியாவில்

தற்போது முன்னேறிய படையினர் பம்பைமடு பகுதி மக்கள் குடியிருப்பு பகுதிகளில் நிலைகொண்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை வடக்கில் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டு நீண்டநாள் பாரிய இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா இராணுவவட்டாரங்கள் தகவல்வெளியிட்டுள்ளன

வடக்கில் வவுனியா மாவட்டத்தில் பெருமளவு சிறிலங்கா இராணுவத்தினர் குண்டுவீச்சு விமானங்கள் மற்றும் போர் உலங்கு வானூர்திகள் சகிதம் முன்னேறி வருவதாகவும் பல புதிய போர் முறைகளை இராணுவம் பின்பற்றுவதாகவும் அரசசார்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மன்னார்

ரத்தைக் காண முடியாது உள்ளது என்றார்.

இங்கு வாழும் மக்கள் மீன் பிடிப்பதற்கு கடலில் 3 கி. மீ. தூரம் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றனர். அதுவும் பகல் வேளைதான் மீன்பிடிக்க அனுமதிக்கப்படுகின்றனர். மீனவர்களின் மீன்களை இடைவெளியில் இராணுவத்தினர் பறித்து எடுக்கின்றது.

மேலும் சுயதொழிக்குத் தேவையான உபகரணங்களையும் மாடுகளையும் இராணுவம் பிடித்தும் வருகின்றது. மருந்துப் பொருள்களுக்கும், டாக்டர்களுக்கும் பற்றாக்குறைநிலவுகின்றது சுய தொழில்வாய்ப்பு முற்றாக பாதிப்படைந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

செட்டிகுளம்

எனவே இந்த அகதிகளை முதலியார் குளத்திற்கு வருமாறும். அவ்வாறு இவர்கள் வந்தாலே தாம் முகாமை நடத்த முடியும் என ஐ. நா. அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம்,தெரிவித்துள்ளது. எனவேசெட்டிகுளத்தில்உள்ள மக்கள் இடம்பெயர்ந்து முதலியார் குளத்திற்கு வருவதாக தெரியவருகின்றது. [நி]

திருமலை

மீதே விடுதலைப்புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர்.

இத் தாக்குதலின்போது அவ் இரு ஊர்காவல் படையினரும் கொல்லப்பட்டனர் இவர்களிடமிருந்து சொட்கன் - 01. காட்ரஜ் 04. கத்தி 01, டோச் லைட் - 01 ஆகியனவே விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

## மடு அகதிமுகாமில் சுயதொழில் முயற்சிகள்

[மன்னார்]

சுய தொழில் ஊக்குவிப்பு நடவடிக்கையும், சுகாதார, சூழல் பாதுகாப்பு போன்றவற்றையும், கருத்தரங்குகளையும் மன்னார் கத்தோலிக்க மறை மாவட்டம் மேற்கொண்டு வருகின்றது என தெரியவருகின்றது.

இதற்கு முதல் கட்டமாக மன்னார் அகதிமுகாமில் உள்ள குடும்பங்களை 50 குடும்பங்களாக ஒன்றிணைத்து இத்திட்டத்தை செயல்படுத்தி வருகின்றனர்.

இதேவேளை மடு அகதிகள் முகாமில் உள்ள ஆஸ்பத்திரியில் டாக்டர், மருந்து, மருந்து உதவியாளர் இல்லாது பெரும் கஷ்டத்தை அவர்கள் எதிர் கொள்ளுகின்றனர். [நி]

## வடமராட்சி கோட்ட மாவீரர்நினைவஞ்சலிகூட்டம்

(வடமராட்சி)

வடமராட்சிக் கோட்டத்தில் இதுவரை காலமும் தை மாதத்தில் வீரச்சாவெய்திய 16 மாவீரர்களுக்கான வீர வணக்கக் கூட்டம் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் பருத்தித்துறை அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பா. பைந்தமிழன் தலைமையில் கரவெட்டி இராஜகிராமம் சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

கரவெட்டி வட்டத்தில் பாபு, சோதியா, ரவி, பருத்தித்துறை வட்டத்தில் ராஜ்மோகன், வின்சன், வெள்ளை, கப்டன் வல்லவன், சபேசன், கண்ணன், றொசான், சாள்ஸ் உடுப்பிட்டிவட்டத்திற்கப்டன் பண்டிதர், தவம், பவுணர், 2-ம் லெப். குலேந்திரன், அன்பழகன் ஆகிய மாவீரர்களுக்கான கௌரவிப்பு வைபவம் நடைபெற்றது.

மற்றும் வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு அரசண்ணா. யாழ். மாவட்ட துணை அரசியல் நிர்வாக மகளிர் பொறுப்பாளர் செல்வி சுகுணா, வடமராட்சி மகளிர் பொறுப்பாளர் செல்வி தணிகைச் செல்வி, வடமராட்சி மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு. ரூபன்ராஜ் ஆகியோர் நினைவுப் பேருரைகள் நிகழ்த்தினர்.

தொடர்ந்து வடமராட்சிப் பிரிவு கலை பண்பாட்டுக் கழகத்தினரின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (யோ)

## மரண அறிவித்தல்கள்

### நாகமுத்து வேலுப்பிள்ளை

கோப்பாய் தெற்கில் வசித்துவந்த நாகமுத்து வேலுப்பிள்ளை (31 - 01 - 93 இல்) காலமாகிவிட்டார். இவர் மாறுபதத்தின் அன்புக்கணவரும் புவனேஸ்வரி, இராசேந்திரம், புஸ்பவதி, [பிரான்ஸ்), புஸ்பானந்தன் (கனடா), பாலேந்திரம் சுவிஸ்), ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் சோமசுந்தரம் (சிங்கப்பூர்] காலஞ்சென்ற கணேசலிங்கம், ஆச்சிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் தயாபரன் [இ. மி. ச] தயானந்தன் [பிரான்ஸ்] ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் தெற்கு,
கோப்பாய் [4191]

தகவல்:
தயாபரன் [மருமகன்]

### மயிலங்கூடல் சின்னத்தம்பி சிறீரங்கம்

மயிலங்கூடல் சின்னத்தம்பி சிறீரங்கம் அவர்கள் நேற்று [31-1-93)காலை காலமாகிவிட்டார்கள். இறுதிக் கிரியைகள் அவர்கள் இப்போது இருக்கும் 25, மணல் தறை ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியை உடைய வீட்டில் நேற்று நண்பகல் நடைபெற்றது.

25, மணல்தறை ஒழுங்கை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
(4196)

தகவல்:
சி. அப்புத்துரை[மகன்)
மயிலிட்டி கலைமகள் மகா
வித்தியாலய முன்னைநாள்
அதிபர்)

### இராமலிங்கம் வேலுப்பிள்ளை

முருக்கடி அளவெட்டி வடக்கைச் சேர்ந்த இராமலிங்கம் வேலுப்பிள்ளை காலமானார். இவர் பொன்னம்மாவின் அன்புக் கணவரும் பரம்சோதி, கணேசமூர்த்தி, சுப்பிரமணியம் [தமிழர் புனர்வாழ்வுக் கழகம் T. R. O]. கிருஷ்ணமூர்த்தி (அளவெட்டி / மல்லாகம் ப. நோ. கூ. சங்கம்), சிவலிங்கம் (மக்கள் வங்கி காங்கேசன்துறை), கனகரத்தினம், மங்களேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகலிங்கம் (பிரபலவர்த்தகர்), சிறிகதிர்காமசம்பந்தர் (அதிபர், சாந்தமகியான் கல்லூரி அளவெட்டி), சுந்தரலிங்கம் (சட்டக் கல்லூரி), சிவபாக்கியம், கலாதேவி, அருட்செல்வி, கலைச்செல்வி ஆகியோரின் அன்பு மாமனாருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் சண்டிலிப்பாய் வட்டுக்கு அருகில் உள்ள சிதம்பரநாதன் இல்லத்தில் 31 - 01 - 93 இல் நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
இ. கணேசமூர்த்தி
(5914)

### மார்க்கண்டு நாகம்மா தெல்லிப்பழை

தெல்லிப்பழையைச் சேர்ந்த மார்க்கண்டு நாகம்மா காலமானார், அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டுவின் அன்பு மனைவியும், குணபூசணி பரமேஸ்வரி மகேந்திரன் [ஜேர்மனி], மனோகரி [ஜேர்மனி], றோகினி ஆகியோரின அன்புத் தாயாரும், இராஜரட்ணம் [துறைமுக அதிகாரசபை கொழும்பு]. அருளானந்தம் [ஆசிரியர் கோப்பாய் மகாவித்தியாலயம்], இருபாகரன் [ஜேர்மனி], செல்வராணி [ஜேர்மனி]. சிறீகரன் [ஈழநாதம்] ஆகியோரின் மாமியாரும், கேமதோ. தங்கராசா, கெலன்ராஜ். கெலன்குமார், கெலன்சுரேஸ், கெலன்சங்கர், றஜீவன், அர்யுன், சாயிதன், சாயிப்பிரியா, டிலக்சன் ஆகியோரின் பேர்த்தியாரும் சுகந்தனின் பூட்டியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 1 - 2 - 93 காலை 11,00 மணிக்கு வீரபத்திரர் கோவிலடி இருபாலை, கோப்பாய் இல்லத்தில் நடைபெற்று கோப்பாய் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஏற்றுக்கொள்ளவும்.

[சி-5916]

தகவல் :
பிள்ளைகள், மருமக்கள்

## கண்ணீர் அஞ்சலி

### செல்வி கமலநாயகி பாலசிங்கம்

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்தில் சுருக்கெழுத்தாளராகக் கடமையாற்றியவரும் காரைநகர் கதிர்காம சுவாமி கோவிலடியை நிரந்தரவதிவிடமாகக் கொண்டவரும் தற்போது 19, ஐயனார் கோவிலடியை வதிவிடமாகக் கொண்டவருமான செல்வி கமலநாயகி பாலசிங்கம் கொழும்பில் 30-1-93-ல் காலமானார். அன்னாருக்கு எங்கள் இதயபூர்வமான கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

மாவட்ட நீதிபதியும்,
ஊழியர்களும்,
ஊர்காவற்றுறை
(4195)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 01ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.